ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2483/31 - 2026 අප්‍රේල් මස 10 වැනි සිකුරාදා - 2026.04.10

*2483/31 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### இரண்டாம் நிலை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகம்

### 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்

53 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் (இதன் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பிடப்படும்) 53ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டும், அமைச்சரவையின் அனுமதியைப் பின்பற்றியும், இக் கட்டளையின் மூலம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்:-

(அ) அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரரின் வணிகத்தை, இரண்டாம் நிலை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகமொன்றாக பெயரிடுவதற்கு, அமைச்சரவையானது 2026 மாச்சு 30ஆம் திகதியிட்ட 26/0621/804/083 ஆம் இலக்கத் தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கியுள்ளது;

(ஆ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகத்தை மேற்கொள்ளும் விண்ணப்பதாரரின் பெயர், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்;



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) குறித்த வணிகத்தை இரண்டாம் நிலை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகமொன்றாக கருதுவதற்கான தர்க்க ரீதியான காரணங்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறாகும்; மற்றும்

(ஈ) குறித்த சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை III இல் குறிப்பிட்டுள்ளவாறு அமைதல் வேண்டும் என்பதுடன், அவை அவ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் ஆரம்பிக்கப்பட்டு குறித்த திகதிகளில் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2026, ஏப்பிறல் 10.

**அட்டவணை I**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாக நியமிக்கப்பட்ட வணிகத்தின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| 1. விண்ணப்பதாரியின் பெயர் | டெலொய்ட் டெக்னோலஜி சொல்யூஷன்ஸ் லங்கா (பிரைவட்) லிமிடெட் (DELOITTE TECHNOLOGY SOLUTIONS LANKA (PRIVATE) LIMITED) | |
| 2. அங்கீகரிக்கப்பட்ட நபரின் அனுமதிப்பத்திர இலக்கம் | 2409180105 | |
| 3. அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட திகதி | 2024 ஒற்றோபர் 9 | |
| 4. தகைமை அளவுகோல்கள் | 2025, செத்தெம்பர் 20 ஆம் திகதிய 2454/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்கு விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குவது தொடர்பான வழிகாட்டல்கள்) ஒழுங்குவிதிகளின் 5ஆம் ஒழுங்குவிதி | |
| 5. வணிகத் துறை | தகவல் தொழில்நுட்பம் | |
| 6. எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் (அமெரிக்க டொலர்) | வருடம் 1 | 34,000 |
| | வருடம் 2 | - |
| | வருடம் 3 | - |
| | வருடம் 4 | - |
| | வருடம் 5 | - |
| 7. எதிர்பார்க்கப்படும் வேலைவாய்ப்பு வாய்ப்புகள் (எண்ணிக்கை) | வருடம் 1 | 10 |
| | வருடம் 2 | 25 |
| | வருடம் 3 | 46 |
| | வருடம் 4 | 78 |
| | வருடம் 5 | 112 |
| 8. வர்த்தக ரீதியான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் திகதி | இக்கட்டளை பிரசுரிக்கப்பட்டு 03 மாதங்களில் | |

## அட்டவணை II

### செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வணிகமாகக் கருதுவதற்கான நியாயப்பாடு

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53(5) ஆம் பிரிவின் ஏற்பாடுகளான தேசிய நலன் அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு, கொழும்பு துறைமுக நகரத்தை நிறுவுதலின் வெற்றியை உறுதி செய்வதற்காக, இவ்வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகமொன்றாக பெயரிடும்போது குறித்த சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் நோக்கங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட டெலொய்ட் டெக்னோலஜி சொல்யூஷன்ஸ் லங்கா (தனியார்) நிறுவனமானது (Deloitte Technology Solutions Lanka (Private) Limited (DTSL), டெலொய்ட் எட்வைசரி சர்வீசஸ் (தனியார்) நிறுவனத்தின் (DASL) 100% உரிமையுடைய ஒரு துணை நிறுவனமாகும் . இது டெலொய்ட் தெற்காசிய வலையமைப்பு கூட்டமைப்பின் ஊடாக இணைக்கப்பட்ட உலகளாவிய டெலொய்ட் வலையமைப்பின் ஒரு அங்கமாகும், டி.டி.எஸ்.எல் (DTSL) நிறுவனத்தின் தாய் நிறுவனமான டி.ஏ.எஸ்.எல் (DASL), இலங்கை மற்றும் மாலைதீவுகளில் உள்ள டெலொய்ட்டீ நிறுவனச் செயல்பாடுகளின் ஒரு அங்கமாகும். இது இலங்கையின் தனியார் மற்றும் அரச துறை வாடிக்கையாளர்களுக்குச் சேவையாற்றுவதில் விரிவான அனுபவத்தைக் கொண்ட இலங்கையில் வசிப்பவர்களால் உரிமையாக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான டெலொய்ட் நிறுவனமானது, அதன் இணைந்த நிறுவனங்கள் மற்றும் முன்னைய நிறுவனங்களுடனான தொடர்புகள் மூலம், 1981 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நீண்டகாலச் செயல்பாட்டு வரலாற்றைக் கொண்டுள்ளது. தற்போது இது 4 அலுவலகங்களுடன் (மாலைதீவில் 1 , இலங்கையில் 3) இயங்கி வருவதுடன், 28 பங்குதாரர்கள் மற்றும் பங்குதார்களுக்கு நிகரான ஏறக்குறைய 950 தொழில் வல்லுநர்களைப் பணியில் அமர்த்தியுள்ளது. டெலொய்ட், ஒரு பன்முகத் துறைசார் தொழில்முறை சேவை நிறுவனமாக கணக்காய்வு மற்றும் உறுதிப்பாடு , வரி , மூலோபாயம் , இடர் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் உருமாற்றம் ஆகிய முக்கிய துறைகளில் பரந்தளவிலான சேவைகளை வழங்குகின்றது.

டி.டி.எஸ்.எல் (DTSL) நிறுவனமானது, தெற்காசியா, மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் முக்கிய இலக்குச் சந்தைகளில் உள்ள டெலொய்ட் வலையமைப்பு அலுவலகங்கள் மற்றும் ஏனைய புதிய வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்காக புதிய தயாரிப்புகளையும் சேவைகளையும் வடிவமைக்கின்றது. கணக்காய்வு மற்றும் உறுதிப்பாடு, வரி மற்றும் சட்டம் , மூலோபாயம் , இடர் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் உருமாற்றம் ஆகிய துறைகளிலான தொழில்முறை சேவைகள் டி.டி.எஸ்.எல் வழங்கும் . இலங்கையில் உள்ள உயர்தர திறமைமிக்க வல்லுநர்களின் வளத்தையும், எமது உலகளாவிய வலையமைப்பிலுள்ள வலுவான வர்த்தகப் பெயர் மற்றும் நிபுணத்துவத்தையும் சாதகமாகப் பயன்படுத்தி, எமது உலகளாவிய வாடிக்கையாளர்களுக்குப் பரந்தளவிலான சேவைகளை வழங்குவதற்கு டெலொய்ட் நிறுவனம் சிறந்த நிலையில் இருக்கின்றது.

## அட்டவணை III

| *அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவாக்கங்கள்* | | *வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* | *ஆரம்பமாகும் திகதி* | *முடிவடையும் திகதி* |
|---|---|---|---|---|
| 01 | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ். அனைத்து ஆதாயங்கள் மற்றும் இலாபங்கள் மீதான கூட்டிணைக்கப்பட்ட வருமான வரியானது. 7.5% எனும் சலுகை வரி வீதத்தில் அறவிடப்படும் | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படு ம் திகதி | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 4 ஆண்டுகளில் |

**அட்டவணை III -** *தொடர்ச்சி*

| *அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவாக்கங்கள்* | | *வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* | *ஆரம்பமாகும் திகதி* | *முடிவடையும் திகதி* |
|---|---|---|---|---|
| 02 | 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 03 | 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 04 | 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 05 | 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 06 | சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம்சார் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளுக்கும். இச்சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும் | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் நிகதி | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் திகதியில் |
| 07 | 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம்சார் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளுக்கும், இச்சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும் | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் திகதியில் |
| 08 | 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிகம்சார் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளுக்கும், இச்சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படும் | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் திகதியில் |
| 09 | 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரிச் சட்டம் | இச் சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| 10 | 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர் வேலை நிறுத்தம் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, 11ஆம் பிரிவு மற்றும் 12 ஆம் பிரிவு ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படும். | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் உரிமம் காலாவதியாகும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது |
| 11 | பொழுதுபோக்கு வரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 267) | இச் சட்டத்தின் 2 ஆம் பிரிவிலிருந்து விலக்களிக்கப்படும். | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் உரிமம் காலாவதியாகும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது |

**அட்டவணை III -** *தொடர்ச்சி*

| *அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள சட்டவாக்கங்கள்* | | *வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* | *ஆரம்பமாகும் திகதி* | *முடிவடையும் திகதி* |
|---|---|---|---|---|
| 12 | 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டம் | 2022, யூன் 3 ஆம் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அந்தியச் செலாவணி (கொழும்புத் துறைமுக நகரத்திலான முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் நீங்கலாக, இச்சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். | இக்கட்டளை பிரசுரிக்கப்படும் திகதி | அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் உரிமம் காலாவதியாகும் போது அல்லது முடிவுறுத்தப்படும் போது |
| 13 | 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்ட தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | இச்சட்டத்தின் கீழ் எவ்வித வரிவிலக்கும் அல்லது ஊக்குவிப்பும் வழங்கப்படவில்லை | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |

EOG 04 - 0191

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.